தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

DVC. No.24/2026

11.06.2026

**திரு. செந்தில் , த/பெ. அப்பாங்கு**

RW : 1

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது திருமணம் பெரியோர்களால் நிச்சயக்கப்பட்டு திருமணம் என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். எனது பிள்ளைகள் எத்தனாவது வகுப்பு படிக்கிறார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். திருமணத்திற்கு முன்பு வெளிநாட்டில் இருந்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு சுமார் 4 வருடங்கள் வெளிநாட்டில் இருந்தேன். வெளிநாட்டிலிருந்து வந்த பிறகு நான் நீர் இரைக்கும் இன்ஜீன் மெக்கானிக்காக வேலை பார்க்கிறேன் என்றால் சரிதான். இப்போது என்னால் வேலை பார்க்க முடியவில்லை. நான் தற்போதும் அந்த வேலை தான் பார்த்து வருகிறேன் என்றாலும், அதன்மூலம் மாதம் ரூ.50,000/- வருமானம் வருகிறது என்றாலும் இல்லை. என் அண்ணன் மூலம் வேலை வந்தால் மட்டும் தான் உண்டு.

சித்தாநல்லூர் என்ற ஊரில் சேமங்கலம் என்ற கிராமத்தில் எனக்கு 1500 சதுர அடியில் மாடி வீடு உள்ளது என்றால் எனது பெயரில் எதுவும் இல்லை. அது கூட்டுக்குடும்ப பொதுவில் 10 பேருக்கு உரிமை உள்ளது. அந்த வீடு எனது தனிப்பட்ட சொத்து என்றாலும், வழக்கிற்காக கூட்டுக்குடும்ப சொத்து என பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு வெளிநாட்டில் வேலை பார்த்த வருமானத்தை கொண்டு தான் அந்த வீடு கட்டினேன் என்றால் சரியல்ல. அது 50 வருடத்திற்கு முன்பு கட்டிய வீடு. எனக்கு 7 மா விவசாய நிலம் உள்ளது என்றால் என் பெயரில் எதுவும் இல்லை. அவ்வாறு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் என்னால் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்னால் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் நஷ்டஈடு கொடுப்பதிலிருந்து தப்பிக்க பொய்யாக அந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்தின் போது மனுதாரருக்கு செய்த நகைகள் 15 பவுனும் என்னிடம் உள்ளது என்றால் நான் வெளிநாட்டில் இருந்தேன் என் பொருட்களையும் சேர்த்து மனுதாரர் எடுத்துக்கொண்டு

அவரது வீட்டிற்கு சென்றுவிட்டார். திருமணத்தின்போது மனுதாரருக்கு சீதனப் பொருட்கள் வாங்கி கொடுத்தோம், இருசக்கர வாகனம் வாங்க ரூ.25,000/- கொடுத்ததையும் நான் எடுத்துக்கொண்டு மனுதாரரை அடித்து துரத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய சொந்த பணத்தை கொண்டு திருமணத்திற்கு முன்பே வாகனம் வாங்கிவிட்டேன். அதற்கான ஆதாரங்கள் உள்ளன. அவர் கொண்டு வந்த சீதனப் பொருட்களை அவரை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்.

திருமணத்தின் போது மனுதாரருக்கு அவரது வீட்டில் செய்த சீர்வரிசை சாமான்கள் மற்றும் நகைகள் அனைத்தும் என்னிடம் உள்ளது என்றாலும், அதனை நான் தான் எடுத்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல. நான் தினமும் மது அருந்தும் பழக்கம் உள்ளவர் என்றால் இல்லை. எனது மனைவியும், குழந்தைகளையும் 3 வருடங்களாக அவரது அப்பா வீட்டில் தான் உள்ளார்கள் என்றால் சரியல்ல. 1 ½ வருடங்களாக தான் உள்ளார்கள். 3 வருடங்களாக நான் மனுதாரர்களுக்கு உணவு, உடை போன்ற அத்தியாவசிய தேவைகள் எதற்கும் நான் பணம் கொடுத்து உதவவில்லை என்றால் சரியல்ல. அவர்கள் 1 ½ வருடங்களாக தான் அவரது அப்பா வீட்டில் இருக்கிறார். நான் தீபாவளிக்கு எல்லாம் பணம் கொடுத்துள்ளேன்.

நான் தீபாவளிக்கு பணம் கொடுத்தாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தற்போது என் வாழ்வதாரத்திற்கு பணம் எதுவும் இல்லை. கடந்த 14.10.2024 ந் தேதியில் எனது பெரிய மகளின் பள்ளியில் பெற்றோர்கள் கூட்டத்திற்கு வரச்சொல்லி இருந்தார்கள் என்றால் சொன்னதே எனக்கு தெரியாது. அந்த கூட்டத்திற்கு மனுதாரர் கிளம்பிய போது அவரது முடியை பிடித்து இழுத்து அவரது சேலையை கொண்டே Fan ல் நான் தூக்கு மாட்டி விட்டேன் என்றால் சரியல்ல. நான் வீட்டிலேயே இருக்கமாட்டேன் வெளியில் வேலைக்கு சென்றுவிடுவேன். அன்றைய தினம் நான் மனுதாரரை அடித்துவிட்டு தான் வேலைக்கு சென்றேன் என்றாலும், அப்போது அக்கம் பக்கத்தினர் தான் மனுதாரரை காப்பற்றினார் என்றால் சரியல்ல.

அக்கம் பக்கத்தினர் தான் மனுதாரரை அப்பாவிற்கு சொல்லி அவர் வந்து அழைத்து சென்றால் என்றால் சரியல்ல. கடந்த 04.12.2024 ல் நான் மனுதாரரின் அப்பா வீட்டிற்கு சென்று அவரை வெளியே இழுத்து அடித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிள்ளையை பார்க்க சென்றேன் அடித்ததாக சொல்கிறார்கள். நீதிமன்றத்திற்கு வரும் போது போகும் போது மனுதாரரிடம் சண்டை போட்டு கொள்கிறேன் என்றால் இல்லை. Camera பதிவுகளை பார்த்து கொள்ளுங்கள். 04.12.2024 ல் மனுதாரரை அடித்தற்காக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மனுதாரர் கொடுத்த புகாரின் பேரில் விசாரித்தார்கள் என்றால் பிள்ளையை பார்க்க சென்ற என்னை அடித்ததாக கூறி பார்க்க விடாமல் சென்றுவிட்டார்கள். சென்ற

மாதம் நான் குடித்துவிட்டு மனுதாரர் வீட்டிற்கு சென்று சண்டை போட்டுள்ளேன் என்றாலும், அது சம்மந்தமாக மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. 1 ½ வருடத்தில் நான் மனுதாரர் வீட்டிற்கு பிரச்சனை செய்வதற்காக சென்றது இல்லை. நான் குழந்தையை பார்க்க மனுதாரர் வீட்டிற்கு செல்வது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

நான் செய்த குடும்ப வன்முறைக்காக தான் மனுதாரருக்கும் குழந்தைகளுக்கும் இழப்பீடு கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 15 வருடம் நான் சம்பாதித்த எல்லாவற்றையும் மனுதாரர் எடுத்து சென்றுவிட்டதாலும், என் வாழ்வதாரத்திற்கே வழியில்லாமல் இருப்பதாலும் என்னால் கொடுக்க முடியாது. நான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்பதற்காக அனைத்தும் மனுதாரர் எடுத்து சென்றுவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.06.11 17:57:04 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்